**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**MCOP No.30/2021** **தேதி: 19.09.2025**

**எ.ம.சா. 1 – கார்த்திக்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் எனது நிருவனத்தில் சட்ட நிர்வாக அதிகாரி மற்றும் வாகன இழப்பீடு வழங்கும் துறையில் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். அதனால் எனக்கு சட்டம் சம்பந்தமான விஷயங்கள் மற்றும் வாகன இழப்பீடு வழங்கும் விதிகள் பற்றி எனக்கு நன்கு தெரியும். வாகனத்தின் உரிமையாளர் எதன் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது என்றால் வாகன பதிவு சான்றிதழ் யார் பெயரில் உள்ளதோ அதன் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்தை ஓட்டிச் செல்பவர் தான் ஓட்டுனர் என்று சொல்லப்படுவார். விபத்து சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN 65 L 1960 என்ற இரு சக்கர வாகனத்தின் உரிமையளார் பெயர் கே.முருகேசன். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை ஓட்டிச் சென்றவர் பெயர் ஈஸ்வரன். வாகன விபத்தில் 3 ம் தரப்பினர் யார் என்றால் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் உரிமையாளர், வாகனத்தின் ஓட்டுனர், வாகனத்தில் பயணிப்பவர் அல்லாத நபர்கள் 3 ம் தரப்பினர் ஆவார்கள்.

வாகனத்தில் பயணம் செய்பவர்களுக்கு இழப்பீடு பாலிசி உட்படும் என்று சொன்னால் Package policy எடுத்திருந்தால் அது பாலிசிக்கு உட்படும். ACT Policy ல் ஓட்டுனருக்கு காப்பீடு உண்டு என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பந்தமான கோப்புகளை நான் நேரடியாக சென்று பார்த்தேனா அல்லது வேறு யாரும் கள ஆய்வு செய்து அதை நான் பார்த்தேனா என்றால் கள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் சொல்கிறேன். கள ஆய்வு அறிக்கையை நான் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை. எ.ம.சா.ஆ 1 ல் எந்த, எந்த நபர்களுக்கு பிரிமியம் வாங்கப்பட்டுள்ளது என்றால் Basic Premium ரூ.720/– வாங்கப்பட்டுள்ளது. PA Owner Cum டிரைவர் ரூ.50/– வாங்கப்பட்டுள்ளது. PA to Passenger ரூ.14/– வாங்கப்பட்டுள்ளது. PA Owner Cum டிரைவர் என்பது வாகனத்தின் ஓட்டுனர் உரிமையாளராக இருக்கும் பட்சத்திலேயே காப்பீடு கவர் ஆகும். PA Owner Cum டிரைவர் என்பது ஓட்டுனர் மற்றும் உரிமையாளருக்கு கவர் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எல்லா வாகனத்திலும் கட்டாய தனி நபர் காப்பீடு கொடுக்க வேண்டும் என்பது உள்ளது என்றால் வாகனத்தின் ஓட்டுனர் : உரிமையாளருக்கு தான் அவ்வாறு உள்ளது. எ.ம.சா.ஆ 1 ல் Compulsory PA என்று போடப்படவில்லை. எ.ம.சா.ஆ 1 சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் உண்மை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. Passenger க்கு வாங்கப்பட்ட பிரிமியத்திற்கு அன்லிமிடெட் Liability உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் சம்பவ இடத்திலேயே இறந்தாரா அல்லது மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தாரா என்றால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார். இந்த விபத்தில் ஈடுபட்ட மற்ற வாகனத்தில் உள்ள இரண்டு நபர்கள் காயமடைந்தார்கள். மேற்படி இரண்டு நபர்கள் எங்கள் நிறுவனத்திற்கு எதிராக இழப்பீடு எதுவும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை.

இந்த வழக்கில் ஈஸ்வரன் என்பவர் இறந்துவிட்டதால் மேற்படி விபத்தில் காயம்பட்ட இரண்டு நபர்களிடம் புகார் மனு பெற்று குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். புகாரை மற்றொரு வாகனத்தின் ஓட்டுனர் தான் கொடுத்தார். எனது கள ஆய்வின்அறிக்கையின் படி காவல்துறையினர் இறந்த நபரின் உறவினர்களிடம் இருந்து ஏதாவது வாக்குமூலம் பெற்றார்களா என்றால் பெறவில்லை. இறந்த நபரின் உறவினர்கள் காவல்துறையில் புகார்

எதுவும் கொடுத்து அது மறுக்கப்பட்டது என்றால் இல்லை. இறந்த நபர் ஓட்டிச் சென்ற வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் மேற்படி காப்பீடானது ஊர்ஜிதத்தில் இருந்து என்றால் 3ம் நபருக்கான காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது. எனது நிருவண வாக்குமூலத்தில் வாகனத்தை ஓட்டிச் சென்றவர் மேற்படி வாகனத்தை இரவல் வாங்கி ஓட்டிச் சென்றதாக குற்ற வழக்கு ஆவணங்களில் துலங்குகிறதா என்றால் துலங்கவில்லை.

வாகனத்தை இரவல் வாங்கும் நபர் உரிமையாளரிடம் அனுமதி பெற்று வாகனத்தை ஓட்டிச் சென்றால் அவர் வாகனத்தின் ஓட்டுனராகவே கருதப்படுவார் என்று சொன்னால் சரிதான். மோட்டார் வாகன சட்டம் பிரிவு 147 விதியின் படி ஒரு ஓட்டுனர் விபத்தில் காயம்பட்டாலோ, இறந்தாலோ மேற்படி காப்பீட்டின் மேற்படி ஓட்டுனருக்கு பிரிமியம் தொகை செலுத்தினாலும், செலுத்தாவிட்டாலும் Work man Compensation படி இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ 1 இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபருக்கு எங்களது நிறுவனம் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்ததால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த குற்ற வழக்கை காவல்துறையினர் சரியாக விசாரணை செய்யாமல் அவசர கதியில் Charge abated என்று தவறுதலாக முடித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மனுதாரர் கோரிய இழப்பீட்டை வழங்க கடமைப்பட்டது என்றும், அவ்வாறு இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள தனி நபர் காப்பீடு வாகனத்தின் உரிமையாளருக்கும் மற்றும் அதன் ஓட்டுனருக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும், அந்த காப்பீடு வழங்கப்பட்ட பின்னிட்டு கட்டாய தனி நபர் காப்பீடு வாகனத்தின் உரிமையாளருக்கு வழங்கப்பட வேண்டும் என்று சரத்து அனைத்து வாகன காப்பீட்டிலும் சேர்க்கப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.